அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம் Provincial Department of Education - NWP

# வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
# Provincial Department of Education - NWP

21 T I

## முதலாந் தவணை பரீட்சை – தரம் 13 – 2018
## First Term Test - Grade 13 - 2018

சுட்டெண் : ......................

பொருளியல் I
Economics I

காலம் : 2 மணி

- ❖ **எல்லா வினாக்களுக்கும் இவ்வினாப்பத்திரத்திலேயே விடை எழுதுக**
- ❖ **பல்தேர்வு வினா தொடர்பில் சரியான விடையினை இனங்கண்டு புள்ளிக் கோட்டில் எழுதுக**

01. பின்வருவனவற்றுள் உற்பத்திக்காரணியான “மூலதனம்” என்பதனுள் உள்ளடங்குவது
    1. வங்கியில் பெற்றுக் கொண்ட கடன்
    2. ரூ 5000 தாள் நாணயம்
    3. வேலைக்கு பழக்கப்பட்ட மாடு
    4. இயற்கை வனம்
    5. இரத்தினக்கல் சுரங்கம் (...........)

02. பொருளாதார வளங்கள் எனப்படுபவை
    1. மனிதனால் உருவாக்கப்பட்ட அனைத்து வளங்களும்
    2. பொருளாதாரதமொன்றிலுள்ள அனைத்து உள்ளீடுகளும்.
    3. பூச்சிய விலையில் எல்லையற்ற நிரம்பலை கொண்ட வளங்கள்
    4. வளங்களில் அருமைத்தன்மையுள்ள, அமையச்செலவுள்ள வளங்கள்
    5. வளங்களில் அமையச் செலவைக் கொண்டிராத வளங்கள் (...........)


03. பொருளாதார ரீதியாக சிந்தித்தல் என்பதனால் கருதப்படுவது
    1. அமையச்செலவை அடிப்படையாக கொண்டு தீர்மானமெடுத்தல்
    2. எல்லைச் செலவு, எல்லை வருமான அடிப்படையில் தீர்மானித்தல்
    3. பொருளாதார கோட்பாடுகளை சிந்தித்தல்
    4. அருமை, தெரிவு அடிப்படையில் தீர்மானித்தல்
    5. பொருளின் விலை, உற்பத்திசெலவு பற்றிய தீர்மானம். (...........)

04. சோசலிஷ கொள்கையின் அடிப்படையில் இயங்கிய போதும் ஓரளவிற்கு சந்தை பொருளாதார கொள்கையினை அமுல்படுத்தும் நாடுகள்
    1. சோசலிஷ சந்தை பொருளாதாரம்
    2. சந்தை பொருளாதாரம்
    3. கலப்பு பொருளாதாரம்
    4. சமூக சந்தை பொருளாதாரம்
    5. சோசலிஷப் பொருளாாரம் (...........)

05. உற்பத்தி சாத்திய வளையியின் சாய்வின் மூலம் வெளிப்படுத்தப்படுவது,
    1. அதிகரிக்கும் சந்தர்ப்ப செலவு
    2. வளங்களின் பதிலீட்டுத்தன்மை
    3. கிடையச்சு மாற்றத்தை நிலைகுத்தச்சு மாற்றத்தால் பிரிப்பதாகும்.
    4. அமையச் செலவின் நடத்தையாகும்
    5. நிறை தொழில் மட்ட நிலையாகும். (...........)

06. பொருளாதாரமொன்று பூரண வேலை வாய்ப்பில் பூரண உற்பத்தியை பெறுமாயின் அது அழைக்கப்படுவது.
    1. குறை தொழில் மட்டமாகும்.
    2. வேலையிண்மை வீழ்ச்சியாகும்.
    3. பொருளாதார வினைத்திறனாகும்.
    4. உற்பத்தியில் வினைத்திறனாகும்.
    5. வளப்பங்கீட்டு வினைத்திறனாகும். (...........)

07. கீழுள்ள கேள்விக்கோட்டின் சாய்வின் பெறுமதி யாது?




1. - 25 2. -2.5 3. 0.4
4. 0.04 5. - 0.04 (...........)

08. குறித்த பொருளின் விலை ரூ 200 இலிருந்து ரூ 250 ஆக அதிகரித்த போது மற்றுமொரு பண்டத்தின் கேள்வி 40 அலகில் இருந்து 20 அலகாக வீழ்ச்சி கண்டது என்னி பண்டவகையும் குறுக்கு நெகிழ்ச்சியும் யாது?

| பண்டவகை | குறுக்கு நெகிழ்ச்சி |
|---|---|
| 1. அத்தியவசிய பண்டம் | 0.5 |
| 2. பதிலீட்டுப் பண்டம் | 2.0 |
| 3. நிரப்புப் பண்டம் | -2.0 |
| 4. கிபன் பண்டம் | -0.5 |
| 5. ஆடம்பரப் பண்டம் | 5.0 |

(...........)

09. நுகர்வோரின் வருமானம் ரூ 400 இலிருந்து ரூ 500 ஆக அதிகரித்த போது பட்டருக்கான கேள்வி 5 அலகில் இருந்து 6 அலகுகளாக அதிகரித்தது எனின் பட்டரானது.
1. அத்தியவசிய பண்டம் 2. ஆடம்பரப் பண்டம் 3. இழிவுப் பண்டம்
4. கிபன் பண்டம் 5. பதிலீட்டுப் பண்டம் (...........)

10. கையடக்க தொலைபேசிகள் சார்பளவில் கேள்வி நெகிழ்ச்சியுள்ளது என கருதுக. இந்நிலையில் கையடக்க தொலைபேசிகளின் நிரம்பல் அதிகரிக்குமாயின் கையடக்க தொலைபேசிகளின் விலை, மற்றும் உற்பத்தியாளர் வருமானம் என்பவற்றிற்கு யாது நிகழும்?

| உற்பத்தியாளர் வருமானம் | விலை |
|---|---|
| 1. அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 2. குறையும் | குறையும் |
| 3. அதிகரிக்கும் | குறையும் |
| 4. அதிகரிக்கும் | மாறாது |
| 5. மாறாது | குறையும். |

(...........)

11. X பண்டத்தின் விலை ரூ 40 இலிருந்து 50 வரை அதிகரிக்கும் போது X பண்டத்தின் விலை கேள்வி நெகிழ்ச்சி -1.5 ஆக இருந்தது. இதனால் கேள்வித் தொகையானது X பண்டத்தின் 100 அலகில் இருந்து எவ்வளவாக மாற்றமடையும்.?
1. 137.5 அலகுள் அதிகரிக்கும். 2. 62.5 அலகுள் குறையும் 3. 125.5 அலகுள் அதிகரிக்கும்.
4. 90 அலகுள் குறையும் 5. 110 அலகுள் அதிகரிக்கும். (...........)

12. குறித்தவொரு பொருளுக்கான கேள்வி, நிரம்பல் சார்புகள் வருமாறு,
Qd = 140 – 2P, Qs = -20 + 2P
இப்பண்டத்திற்கு சந்தை சமநிலையின் போது நுகர்வோன் மிகையும் உற்பத்தியாளர் மிகையும் யாது?

| நுகர்வோன் மிகை (ரூ) | உற்பததியாளர் மிகை (ரூ) |
|---|---|
| 1. 800 | 2400 |
| 2. 900 | 800 |
| 3. 2400 | 1800 |
| 4. 600 | 900 |
| 5. 900 | 900 |

(...........)

13. குறித்த காலப்பகுதியொன்றில் குறித்த பொருள் தொடர்பான நிரம்பல் வருமாறு

| P | QS |
|---|---|
| 100 | 800 |
| 100 | 600 |

மேலுள்ள நிலமை ஏற்படுதவற்கு கேள்வி, நிரம்பலில் யாது நிகழ வேண்டும்?

| நிரம்பல் | கேள்வி |
|---|---|
| 1. குறைதல் | மாறாது |
| 2. குறைதல் | குறைதல் |
| 3. அதிகரித்தல் | அதிகரித்தல் |
| 4. குறைதல் | அதிகரித்தல் |
| 5. அதிகரித்தல் | குறைதல் |

(...........)

14. கிபன் பண்டம் தொடர்பில் உம்மால் ஏற்றுக் கொள்ள முடியுமான கூற்று எது?
1. கிபன் பண்டத்திற்கு விலை கேள்வி நெகிழ்ச்சி எதிர்க்கனியமாகும்.
2. எல்லா கிபன் பண்டங்களும் இழிவுப்பண்டங்கள் அல்ல
3. இழிவுப்பொருட்கள் எல்லாம் கிபன் பண்டங்களாகும்.
4. கிபன் பண்டங்கள் எல்லாம் இழிவுப்பண்டங்களாகும்.
5. கிபன் பண்டத்திற்கான எதிர்க்கனிய வருமான விளைவை விட பதிலீட்டு விளைவு அதிகமாகும். (...........)

15. கீழுள்ள நிரம்பல் அட்டவணையைக் கொண்ட பண்டத்திற்கான நிரம்பல் நெகிழ்ச்சி யாது?

| P | QS |
|---|---|
| 60 | 400 |
| 80 | 600 |

1. நெகிழ்ச்சியுள்ள நிரம்பல் 2. நெகிழ்ச்சியற்ற நிரம்பல் 3. அலகு நெகிழ்சிச நிரம்பல்
4. முற்றாக நெகிழ்வற்ற நிரம்பல் 5. பூரண நெகிழ்வுள்ள நிரம்பல் (...........)

16. ஏனைய காரணிகள் மாறாத நிலையில் அரிசியின் விலை அதிகரித்த போது நுகர்வோரின் செலவும் அதிகரித்தது எனின் அரசியின் விலை கேள்வி நெகிழ்ச்சி
1. அலக நெகிழ்ச்சி கொண்டது 2. நெகிழ்ச்சியுடையது 3. நெகிழ்ச்சியற்றது
4. இழிவுப்பொருளாக உள்ளது. 5. பூரண நெகிழ்வுள்ளது. (...........)

17. குறித்தொரு பண்டத்திற்கு அரசாங்கம் ரூ 20 அலகு வரியொன்றை விதித்ததனால் அப்பண்டத்தின் விலை ரூ 60 இலிருந்து ரூ 80 ஆக அதிகரித்தது எனின், அப்பண்டத்தின் கேள்வி நெகிழ்ச்சி
1. நெகிழ்ச்சியுள்ளது. 2. அலகுநெகிழ்ச்சி கொண்டது. 3. நெகிழ்சிசயற்றது
4. முற்றாக நெகிழ்சசியற்றது 5. பூரண நெகிழ்வுள்ளது. (...........)

18. குறித்த பொருளொன்றிற்கான கேள்வி நிரம்பல் சார்புகள் வருமாறு.
$Qd = 300 – 5$ $Qs = -50 + 5p$
இப்பண்டத்திற்கு அரசாங்கம் அலகு மானியம் ஒன்று வழங்கிய பின் நிரம்பல் சமன்பாடு $Qs = -30+5P$ ஆக அதிகரித்தது. வழங்கப்பட்ட அலகு மானியம் யாது?
1. ரூ. 4.00 2. ரூ. 3.00 3. ரூ. 2.00 4. ரூ. 5.00 5. ரூ. 6.00 (...........)

19. அரசினால் இழிவு விலையொன்று நிர்ணயிக்கப்படும் பண்டமாக கருத முடியுமானது.
1. பால்மா 2. பான் 3. அரிசி 4. நெல் 5. பருப்பு (...........)

20. அரசு விலை உறுதிப்பாட்டிற்கு மேற்கொள்ளும் நடவடிக்கை அல்லாதது.
1. அனுமதிப்பங்கு முறை 2. இருப்பு பேணல் /வழங்கல்
3. பயிர்ச்செய்கை நிலத்தை வரையறுத்தல் 4. இறக்குமதிகளை கட்டுப்படுத்தல்
5. ஏற்றமதிகளை கட்டுப்படுத்தல் (...........)

21. நிறைபோட்டி நிறுவனமொன்றின் எல்லை வருமானம் (MR) தொடர்பில் சரியான கூற்று எது?
1. விற்பனை தொகை அதிகரிக்கும் போது எல்லை வருமானம் அதிகரிக்கும்.
2. விற்பனை தொகை அதிகரிக்கும் போது எல்லை வருமானம் மாறாது.
3. விற்பனை தொகை அதிகரிக்கும் போது எல்லை வருமானம் குறையும்.
4. விற்பனை தொகை அதிகரிக்கும் போது ஆரம்பத்தில் அதிகரித்து பின்னர் குறையும்.
5. விற்பனை தொகை அதிகரிக்கும் போது எல்லை வருமானம் குறையும். (...........)

22. சந்தை அமைப்பினுள் சமமான அல்லது வேறாக்கப்பட்ட பொருட்களை உற்பததி செய்யும் சந்தை அமைப்பு
1. சிலருரிமை சந்தை 2. நிறை போட்டி சந்தை 3. தனியுரிமை போட்டி சந்தை
4. தனியுரிமை சந்தை 5. சுயாதீன தனியுரிமை சந்தை (...........)

23. குறித்தொரு பொருளுக்கான வெளியீட்டு மட்டமும் மொத்த கிரயமும் தரப்பட்டுள்ளது.

| வெளியீடு | மொத்தக்கிரயம் |
|---|---|
| **Q** | **TC** |
| 0 | 150 |
| 1 | 160 |
| 2 | 180 |
| 3 | 190 |
| 4 | 200 |

இவ்வுற்பததியில் சாராசரி நிலையான செலவு (AFC) தொர்பில் சரியானது எது?
1. வெளியீடு 3 ஆக உள்ள போது சராசரி நிலையான கிரயம் 190 ஆகும்.
2. வெளியீடு 0 ஆக உள்ள போது சராசரி நிலையான கிரயம் 200 ஆகும்.
3. வெளியீடு 4 ஆக உள்ள போது சராசரி நிலையான கிரயம் 60 ஆகும்.
4. வெளியீடு 2 ஆக உள்ள போது சராசரி நிலையான கிரயம் 75 ஆகும்.
5. வெளியீடு 4 ஆக உள்ள போது சராசரி நிலையான கிரயம் 50 ஆகும். (...........)

24. குறுங்கால உற்பத்தி நடத்தையில் மொத்த விளைவு உச்சத்தில் உள்ள போது எல்லை விளைவு
1. மிக இழிவாகும். 2. நேர்க்கனியமாகும். 3. உச்சப்படுத்தப்படும்.
4. அதிகரிக்கும் 5. பூச்சியமாகும். (...........)

25. தேசிய கணக்கீட்டில் உற்பத்தி அணுகு முறையினுள் உள்ளடக்கப்படாதது.
1. சுய தேவைக்கான பயிர்ச் செய்கை உற்பத்தி
2. குடும்ப உறுப்பினருக்கு உணவு சமைத்தல்
3. தமது வசிக்கும் வீட்டில் உழைக்கும் தங்குமிட கட்டணம்
4. சுய தொழில் முயற்சியில் மேற் கொள்ளும் சிறிய உற்பத்தி
5. ஆடை தைத்தல் (...........)

26. தேசிய கணக்கீட்டில் முறையான மதிப்பீட்டிற்கு உட்படாத சட்டரீதியான பொருளாதார நடவடிக்கைகள் அழைக்கப்படுவது.
1. சட்ட விரோத பொருளாதார செயற்பாடுகள் 2. முறைசாரா பொருளாதார நடவடிக்கை
3. வரி செலுத்தும் பொருளாதார நடைவடிக்கை 4. இல்லத்தரசிகளின் சேவைகள்
5. மறைவான பொருளாதார நடவடிக்கைகள் (...........)


27. அடிப்படை விலை உற்பததியுடன் நேரில் வரிகளை சேர்த்து மானியங்களை நீக்கி பெறப்படும் உள்நாட்டு உற்பத்தி அழைக்கப்படுவது
1. அடிப்படை விலை உள்நாட்டு உற்பத்தி
2. சந்தை விலை தேசிய வருமானம்
3. கொள்வனவாளர் விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி
4. சந்தை விலை மொத்த உள்நாட்டு உற்பத்தி
5. அடிப்படை விலை கூட்டிய பெறுமதி (...........)

28. உள்நாட்டு வெளியீட்டை மதிப்பிடும் போது கைவிடப்படும் பயனுள்ள நடவடிக்கையொன்று,
1. அரசினால் வழங்கப்படும் மாற்றங்கள்
2. ஓய்வூதியக்காரர் ஒருவர் பெறும் ஓய்வூதியம்
3. இயற்கையான வளர்ச்சியினால் வளங்களின் பெறுமதி அதிகரிப்பு
4. நிதிப்பத்திரங்களின் கொள்வனவு
5. பயன்படுத்திய சொத்துக்களின் கொள்வனவு (...........)

29. நிலையான மூலதன ஆக்கத்தின் குறித்த வருடத்தில் பயன்படுத்தப்பட்ட அளவு அழைக்கப்படுவது.
1. மொத்த நிலையான மூலதன ஆக்கம் 2. மொத்த உள்நாட்டு மூலதனம்
2. மூலதன தேய்வு 4. இருப்பு மாற்றம்
5. மொத்த முதலீட்டு செலவு (...........)

30. 2017 ம் ஆண்டு இலங்கையில் மொத்த உள்நாட்டு உற்பத்தியானது ஐக்கிய அமெரிக்க டொலர்களில் (USA$)
1. 87.2 Bil  2. 84.8 Bil  3. 82.5 Bil  4. 90.1 Bil  5. 82.7 Bil  (...........)

31. கீழுள்ள நுகர்வுக் கோட்டில் தன்னிச்சையான நுகர்வின் (α) பெறுமதி யாது?




1. ரூ 7000 பில்
2. ரூ 5000 பில்
3. ரூ 4000 பில்
4. ரூ 2000 பில்
5. ரூ 3000 பில்  (...........)

32. தேசிய வருமானம் ரூ 8000 இலிருந்து ரூ 6000 ஆக குறையும் போது நுகர்வு செலவு ரூ 5000 இலிருந்து ரூ 4000 ஆக குறைகின்றது. இதன்போது சராசரி நுகர்வு நாட்டம் (APC) எல்லை நுகர்வு நாட்டம் (MPC) என்பவற்றிற்கு யாது நிகழும்?

| APC | MPC |
|---|---|
| 1. குறையும் | குறையும் |
| 2. அதிகரிக்கும் | மாறாது |
| 3. அதிகரிக்கும் | அதிகரிக்கும் |
| 4. மாறாது | குறையும் |
| 5. குறையும் | அதிகரிக்கும் |

(...........)

33. கன்னிச்சையான நுகர்வு ரூ 500 ஆகவும் தன்னிச்சையான செலவுப் பெருக்கி 10 ஆகவும் உள்ளபோது செலவிடத்தக்க வருமானம் ரூ 1200 அதிகரித்த போது நுகர்வு எவ்வளவால் அதிகரிக்கும்.
1. ரூ. 1080  2. ரூ. 680  3. ரூ. 120
4. ரூ. 1000  5. ரூ. 1100  (...........)


34. பொருளாதாரமொன்றில் அரச செலவு ரூ 250 மில். அதிகரிக்கும் போது தேசிய வருமானம் ரூ 1000 மில். அதிகரித்தது. இப்பொருளாதாரத்தின் எல்லை சேமிப்பு நாட்டம் யாது?
1. 0.75  2. 0.2  3. 0.25  4. 0.28  5. 0.5  (...........)

35. தேசிய வருமான சமநிலை தொர்பான சமன்பாடுகளில் தவறானது.
1. Y = C+I+G+NX  2. Y-I = C+G+X –M  3. X-M = S+T – (I + G)
4. I + G + X = S + T+ M  5. Y = C+S+T+M  (...........)

36. பொருளாதார மந்த நிலையிலிருந்து மீள்வதற்கு அதிகம் தாக்கம் செலுத்தும் செயற்பாடு
1. வருமானவரி அதிகரிப்பு  2. வட்டி வீத அதிகரிப்பு
3. சேமிப்பு அதிகரிப்பு  4. இறக்குமதி அதிகரிப்பு
5. அரச செலவு அதிகரிப்பு  (...........)

37. பணத்திற்கான ஊக, நோக்க கேள்வியுடன் தொடர்புடைய பணத்தின் தொழிற்பாடாக கருதக் கூடியது.
1. பரிமாற்று ஊடகம்  2. பெறுமான அளவீட்டு ஊடகம்
3. பிற்போடப்பட்ட கொடுப்பனவு ஊடகம்  4. பெறுமான திரட்டு ஊடகம்
5. கணக்கீட்டு அலகு  (...........)

38. கீழுள்ள பணத்திற்கான ஊக நோக்க கேள்வி கோட்டில் புள்ளி A யில் இருந்து B நோக்கி நகரும் போது ஏற்படும் தாக்கம்




1. பணத்தை வைத்திருக்கும் அளவு அதிகரிக்கும் 2. ஆவணங்களின் விலை அதிகரிக்கும்
3. ஆவணங்களுக்கு கேள்வி அதிகரிக்கும். 4. ஆவணங்களை விற்பனை செய்ய முன்வருவர்
5. பணத்திற்கான கேள்வி அதிகரிக்கும். (...........)

39. இலங்கையில் நிதி முழுமை ($M_4$) கணிப்பிடுவதற்கு குறுகிய பணநிரம்பலுடன் உள்ளடக்கப்படுவது.
1. சட்டப்பணம் 2. கிட்டிய பணம் 3. பதிலீட்டுப்பணம்
4. வங்கிப்பணம் 5. இலத்திரனியல் பணம். (...........)

40. பணநிரம்பலில் வீழ்ச்சியினை ஏற்படுத்தும் செயற்பாடு எது?
1. மத்திய வங்கி ஆவணங்களை விற்பனை செய்தல்
2. பொதுமக்களின் நுகர்வக்கடன் அதிகரிப்பு
3. காசு ஒதுக்கு வீதம் வீழ்ச்சியடைதல்
4. வணிக வங்கிகளின் மிகை ஒதுக்கு குறைதல்
5. வட்டி வீதம் குறைவடைதல் (...........)

41. நாணய கனியக் கோட்பாட்டின் படி பணநிரம்பல் 10% அதிகரித்தால்
1. பணச்சுற்றோட்ட வேகம் 10% அதிகரிக்கும்
2. மெய் வெளியீடு 10% அதிகரிக்கும்
3. விலைமட்டம் 10% அதிகரிக்கும்
4. விலைமட்டமும் மெய் வெளியீடும் 10% அதிகரிக்கும்.
5. பணச் சுற்றோட்ட வேகமும் மெய் வெளியிடும் 10% அதிகரிக்கும். (...........)

42. கீழுள்ளவற்றுள் பணவீக்கத்தின் விளைவு **அல்லாதது**.
1. பணத்தின் கொள்வனவு சக்தி வீழ்ச்சி
2. பெயரளவு வட்டி வீதம் வீழ்ச்சியடைதல்
3. கடன் கொடுத்தோர் பாதிப்படைதல்
4. மெய் வட்டி வீதம் வீழ்ச்சியடைதல்
5. நிலையான வருமானம் பெறுவோர் பாதிப்படைதல் (...........)

43. கீழுள்ள மததிய வங்கியின் பொறுப்பக்களுள் அடிப்படை பணத்தின் கனிப்பில் தாக்கம் செலுத்தாதது எது?
1. பொதுமக்களிடம் உள்ள சட்டப்பணம்
2. வணிக வங்கிகளிடம் உள்ள சட்டப்பணம்
3. மத்திய வங்கியிடம் உள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள்
4. அரசின் வைப்புக்கள்
5. வணிக வங்கிகளிடம் உள்ள மிகை ஒதுக்கு (...........)

44. வணிக வங்கிகளின் கடனாக்கம் ஏற்படுவது.
1. கேள்வி வைப்பின் மூலம் 2. சேமிப்பு வைப்பின் மூலம் 3. தவணை சேவைப்பு மூலம்
4. சட்டப்பண வெளியீடின் மூலம் 5. சேமிப்பு சான்றிதழ்கள் மூலம். (..........)

45. வணிக வங்கியொன்றிடம் ரூ 400 மில்லியன் ஒதுக்கமும் ரூ 3500 மில். வைப்பும் உள்ளது. மிகை ஒதுக்கு ரூ 50 மில். ஆகும். பொது மக்கள் மேலும் 100 மில்லியன் வைப்பிலிடுவதாக கருதுக. இதன் மூலம் வணிக வங்கி முறைமை உருவாக்க கூடிய கடன்களின் உச்ச அளவு யாது?
1. ரூ. 3600 மில். 2. ரூ. 900 மில். 3. ரூ. 1400 மில்.
4. ரூ. 140 மில். 5. ரூ. 360 மில். (...........)

46. கூட்டாக நுகர்வதும் விலக்கல் விதிக்கு உட்படாததுமான பண்டமொன்று
1. பூந்தோட்டம் 2. குடி நீர் 3. புற் தரை
4. பெருந்தெருக்கள் 5. ரூபவாஹினி ஒளிபரப்பு சமிக்ஞைகள். (...........)

47. உற்பத்தியில் நேர்க்கனிய வெளிவாரி விளைவுகள் உள்ள போது
1. வள ஒதுக்கீடு வினைத்திறனாகும்.
2. சமூக மட்டத்தில் உற்பத்தி உத்தம மட்டமாகும்
3. எல்லை சமூக செலவு எல்லை தனியார் செலவை விட அதிகமாகும். (MSC>MPC)
4. குறை உற்பத்தி காணப்படும்.
5. எல்லை சமூக செலவு எல்லை தனியார் செலவிற்கு சமமாகும். (MSC = MPC) (...........)

48. பொருளாதார தீர்மாணமெடுத்தலுக்கு பாதகம் ஏற்படாத விதத்தில் வரிவிதித்தல் எவ்வாறு அழைக்கப்படும்?
1. திட்டமான தன்மை 2. எளிய தன்மை 3. நம்பகத்தன்மை
4. நடுநிலைமை 5. நெகிழ்ச்சித்தன்மை (...........)

49. அரச நிதிக் கொள்கை என்பது
1. பணநிரம்பல், கடன்கனின் அளவு என்பவற்றை கட்டுப்படுத்தல்.
2. பணவீக்கம், விலைமட்டம் என்பவற்றை உறதியாக வைத்திருத்தல்
3. வரி, அரச செலவு, பொதுப்படு கடன் என்பவற்றை ஒழுங்குபடுத்தல்.
4. சந்தை வட்டி வீதத்தை ஒழுங்குபடுத்தல்
5. பொதுப் பொருட்களை போதுமான அளவு வழங்கல். (...........)

50. நடைமுறையில் இலங்கையில் வரி அரசிறை, வரியல்லா அரசிறை என்பன மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக

| | வரி அரசிறை (%) | வரியல்லா அரசிறை (%) |
|---|---|---|
| 1. | 12.6 | 1.2 |
| 2. | 12.3 | 1.9 |
| 3. | 12.6 | 1.9 |
| 4. | 13.8 | 1.2 |
| 5. | 13.8 | 1.6 |

(...........)

அனைத்து உரிமைகளும் பாதுகாக்கப்பட்டவை/ All Rights reserved

வடமேல் மாகாண கல்வித் திணைக்களம்
Provincial Department of Education - NWP

21 T II

முதலாந் தவணை பரீட்சை – தரம் 13 – 2018
**First Term Test - Grade 13 - 2018**

சுட்டெண் : ........................ | பொருளியல் II / Economics II | காலம் : 3 மணி

(அ) பகுதியில் குறைந்தது இரண்டு வினாக்கள் (ஆ) பகுதியில் இருந்து குறைந்தது இரண்டு வினாக்கள் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு விடை தருக

## பகுதி (அ)

01). i. தேவை, விருப்பம் இடையிலான வேறுபாட்டை குறிப்பிடுக. (புள்ளி 4)
ii. மூலதனம், மனித மூலதனம் ஆகியவற்றுக்கிடையிலான வேறபாட்டை குறிப்பிடுக. (புள்ளி 4)
iii. அருமை பொருளியலில் பிரதான பிரச்சினையாக கருதப்படக் காரணம் யாது? (புள்ளி 3)
iv. உற்பத்தியில் வினைத்திறன், வள ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பவற்றை வரைபடம் மூலம் விளக்குக. (புள்ளி 4)
v. சந்தைப் பொருளாதாரம் என்றால் என்ன? அவற்றின் பிரதான பண்புகள் எவை? (புள்ளி 5)

02). i. கேள்வி விதியில் கையாளப்படும் எடுகோள்கள் எவை? (புள்ளி 3)
ii. கேள்வித் தொகை மாற்றம், கேள்வி மாற்றம் என்பதனை விளக்குக. (புள்ளி 4)
iii. விலைசார் கேள்வி நெகிழ்ச்சியின் நடைமுறை பயன்பாடுகள் எவை? (புள்ளி 3)
iv. நிரம்பல் விதி தொழிற்படுவதற்கான காரணிகள் எவை? (புள்ளி 2)
v. சந்தை சமநிலையில் உள்ள மீன்சந்தை ஒன்றில் ஏற்படும் விளைவுகளை வளையில் காட்டுக
அ) மீனவர்களுக்கான நவீன உபகரணங்கள் வழங்கப்படல்
ஆ) மீன் நுகர்வாளர்கள் அதிகரித்தல்.
இ) நுகர்வாளர்களின் வருமான வீழ்ச்சி (மீன் இழிவுப் பொருள் எனின்)
ஈ) கோழி இறைச்சியின் விலை அதிகரிப்பு (புள்ளி 2x4 = 8)

03). i. நுகர்வோர்மிகை, உற்பத்தியாளர் மிகை இடையே வேறுபாட்டை விளக்குக. (புள்ளி 4)
ii. உற்பததியாளர்களை பாதுகாக்கும் உத்தரவாத விலைமுறையின் இரு நிலமையையும் விளக்குக. (புள்ளி 4)
iii. உயர்விலையின் காரணமாக தோன்றும் விளைவுகளை தவிர்க்க அரசு மேற்கொள்ள முடியுமான நடவடிக்கைகள் எவை? (புள்ளி 2)
iv. குறித்ததொரு பொருளுக்கான கேள்வி, நிரம்பல் சார்புகள் வருமாறு
$Qd = 300 - 5P$ $Qs = -50+5P$
(அ) சமநிலை விலை, தொகை என்பவற்றை கணிக்குக. (புள்ளி 2)
(ஆ) தற்போது அரசு அலகிற்கு ரூ 4 மானியம் உற்பத்தியாளருக்கு வழங்குமாயின் தோன்றும் புதிய சமநிலையை வரைபில் காட்டுக. (புள்ளி 2)
(இ) மானியத்தினால் உற்பத்தியாளர் மிகை மாற்றம் யாது? (புள்ளி 2)
(ஈ) மானியத்தின் பின் பொருளாதார மிகையாது? (புள்ளி 4)

04). i. குறுங்கால உற்பத்தி தொழிற்பாட்டினை விளக்குக. (புள்ளி 3)
ii. கணக்கீட்டு செலவுகள், பொருளியல் செலவுகள் இடையிலான வேறுபாடு யாது? (புள்ளி 4)
iii. அளவுத்திட்ட சிக்கனமின்மைகள் தோன்றுவதற்கான காரணங்கள் எவை? (புள்ளி 4)
iv. தனியுரிமை சந்தையில் காணப்படும் விசேட பண்புகள் எவை? (புள்ளி 4)

v. நெகிழ்ச்சியுள்ள காரணி நிரம்பல் மற்றும் நெகிழ்வற்ற காரணி கேள்வி நிலவும் காரணிச் சந்தையில் உழைக்கப்படும் மாற்றல் கட்டணம் மற்றும் பொருளியல் வாடகை என்பவற்றை வரைபில் காட்டுக. (புள்ளி 5)

05). i. தேசிய கணக்கீட்டில் உள்ளடக்கப்படாத பயனுள்ள, பயனற்ற நடவடிக்கைகளை குறிப்பிடுக. (புள்ளி 6)

ii. தேசிய கணக்கீட்டில் பயன்படுத்தப்படம் அடிப்படை விலை, சந்தை விலை கொள்வனவாளர் விலை என்பவற்றை வேறுபடுத்துக. (புள்ளி 3)

iii. கலப்பு வருமானம் என்றால் என்ன? (புள்ளி 3)

iv. கற்பனையான பொருளாதாரம் ஒன்று பற்றிய தரவுகள் (ரூ மில்)

| | |
|---|---|
| - கலப்பு வருமானம் | 400 |
| - ஊழியர் வருமானம் | 600 |
| - தேறிய தொழிற்பாட்டு மிகை | 100 |
| - நிலையான மூலதன நுகர்வு | 200 |
| - உற்பத்தியாளர் மீதான தேறிய வரி | 100 |
| - வெளிநாட்டு தேறிய முதன்மை வருமானம் | -40 |
| - உற்பத்தி மீதான தேறிய வரி | 150 |

மேலுள்ள தரவுகளை கொண்டு பின்வருவனவற்றை கணிப்பிடுக.

(அ) மொத்த தொழிற்பாட்டு மிகை

(ஆ) அடிப்படை விலையில் கூட்டிய பெறுமதி

(இ) சந்தை விலையில் மொத்த உள்நாட்டு உற்பத்தி

(ஈ) சந்தை விலையில் மொத்த தேசிய வருமானம். (புள்ளி 8)

## பகுதி (ஆ)

06). i. பேரினப்பொருளாதார சமநிலை மாற்றமடைவதில் செல்வாக்கு செலுத்தும் காரணிகள் எவை? (புள்ளி 3)

ii. எளிய பொருளாதாரமொன்றில் தன்னிச்சையான நுகர்வு 150 ஆகும். எல்லை நுகர்வு நாட்டம் 0.6 Yd ஆகும். இப்பொருளாதாரத்தில் நுகர்வு சார்பு, சேமிப்பு சார்பு என்பவற்றுக்கிடையிலான தொடர்பினை வரைபை பயன்படுத்தி விளக்குக. (புள்ளி 4)

iii. (அ) எளிய பொருளாதாரமொன்றில் நுகர்வு சார்பு $C = 300 + 0.6\ Yd$ ஆகவும் முதலீடு $I = 100$ எனின் சமநிலை வருமான மட்டம் யாது? (புள்ளி 2)

(ஆ) இதனை வருமான செலவு அணுகுமுறை, உட்பாய்ச்சல் வெளிப்பாய்ச்சல் அணுகுமுறைப்படி வரைபில் காட்டுக. (புள்ளி 4)

(இ) இப்பொருளாதாரத்தில் தன்னிச்சையான நுகர்வு 200 இனால் அதிகரிக்குமாயின் வருமான மட்டம் மாற்றமடைவதனை வரைபில் காட்டுக. (புள்ளி 2)

iv. (அ) பெருக்கி என்பதனால் கருதப்படுவது யாது? (புள்ளி 1)

(ஆ) $C = 50 + 0.75\ Y$ எனும் சமன்பாட்டினை பயன்படுத்தி அரச செலவு பெருக்கி, வரிப்பெருக்கி என்பவற்றை கணிப்பிடுக. (புள்ளி 4)

07). i. திரவத்தன்மை, திரவத் தேர்வு என்பதனை விளக்குக. (புள்ளி 4)

ii. கிட்டிய பணம் என்றால் என்ன? M4 பண நிரம்பலில் உள்ளடங்கும் கிட்டிய பண வகைகள் எவை? (புள்ளி 4)

iii. கெயின்சியக் கோட்பாட்டின் படி கேள்வித்தூண்டல் பணவீக்கத்தினை வரைபடத்தில் காட்டுக. (புள்ளி 4)

iv. பணநிரம்பலை கட்டுப்படுத்த மத்திய வங்கி எவ்வாறு கொள்கை கருவிகளை பயன்படுத்தும் என விளக்குக. (புள்ளி 6)

v. வணிக வங்கியொன்று 10% காசு ஒதுக்கில் செயற்படுகின்றது. இது ரூ 500 மில். ஒதுக்குகளையும் ரூ 1500 மில். கடன்களையும் ரூ 2000 மில். வைப்புக்களையும் கொண்டுள்ளது. தற்போது ஒதுக்கு வீதம் 15% ஆகும் எனின், கடன் வழங்கல் எவ்வளவு குறைவடையும்? (புள்ளி 2)

08). i. பணத்தின் பிரதான தொழிற்பாடுகள் எவை? (புள்ளி 4)

ii. இலங்கையில் பணம் தொடர்பான கற்பனை புள்ளி விபரங்கள் வருமாறு (ரூ மில்.)

| | |
|---|---|
| - பொதுமக்களிடம் உள்ள சட்டப்பணம் | 450 |
| - வணிக வங்கிகளிடம் உள்ள சட்டப்பணம் | 125 |
| - மத்திய வங்கியில் உள்ள வணிக வங்கிகளின் வைப்புக்கள் | 300 |
| - வணிக வங்கிகளில் உள்ள பொது மக்களின் கேள்வி வைப்பு | 350 |
| - வணிக வங்கிகளில் உள்ள பொதுமக்களின் சேமிப்பு, தவைணை வைப்பு | 4000 |
| - வெளிநாட்டு நாணய அடிப்படையிலான வைப்பு | 650 |
| - பதிவு செய்யப்பட்ட நிதிக்கம்பனிகளிடம் உள்ள வைப்புக்கள் | 1600 |

மேலுள்ள தரவுகளை கொண்டு பின்வருவனவற்றை காண்க.

(அ) அடிப்படைபணம் (ஆ) குறுகிய பணநிரம்பல் ($M_1$)

(இ) விரிந்த பணநிரம்பல் ($M_2$) (ஈ) நிதி முழுமை ($M_4$) (புள்ளி 4)

iii. நாணய கனியக் கோட்பாட்டின் படி பணநிரம்பல் அதிகரிப்பு பணவீக்கத்திற்கு இட்டுச் செல்லும் இக்கூற்றை விளக்குக. (புள்ளி 4)

iv. மத்திய வங்கியின் தொழிற்பாடுகளை குறிப்பிடுக. (புள்ளி 4)

v. கீழுள்ள விடயங்கள் வணிக வங்கிகளின் சொத்துக்களா / பொறுப்புக்களா என குறிப்பிடுக.
(அ) மத்திய வங்கியிலுள்ள காசு (ஆ) திறைசேரி உண்டியல்
(இ) மத்திய வங்கியில் பெற்ற கடன் (ஈ) பொதுமக்களின் கேள்வி வைப்பு (புள்ளி 4)

09). i. பணத்திற்கான கேள்வியை நிர்ணயிக்கும் காரணிகள் எவை? (புள்ளி 3)

ii. அடிப்படைபணம், பணநிரம்பல் ஆகியவற்றை வேறுபடுத்துக (புள்ளி 3)

iii. கொழும்பு நுகர்வோன் விலைச்சுட்டெண், தேசிய நுகர்வோர் விலைச்சுட்டெண் என்பவற்றுக்கிடையே உள்ள வேறுபாடு யாது? (புள்ளி 3)

iv. கொள்கை வட்டி வீதம் என்பதனால் கருதப்படுவது யாது? (புள்ளி 3)

v. வங்கி முறைமையொன்றினுள் தொழிற்படும் ஒரு வணிக வங்கியின் நிதி நிலமை கூற்று வருமாறு

| **பொறுப்பு** | **ரூபா மில்** | **சொத்து** | **ரூபா மில்.** |
|---|---|---|---|
| கேள்வி வைப்பு | 2000 | ஒதுக்குகள் | 300 |
| | | கடன்கள் | 1000 |
| | | முதலீடு | 700 |
| **முழுப்பொறுப்பு** | **2000** | **முழுச்சொத்து** | **2000** |

(அ) ஒதுக்கு வீதம் 10% எனின் இவ்வங்கி வழங்கும் கடன்களின் உச்ச அளவு யாது? (புள்ளி 2)

(ஆ) புதிய கடன் வழங்களின் பின்னர் வங்கியின் நிதிநிலமை கூற்றை தயார் செய்க. (புள்ளி 3)

(இ) இவ்வங்கி புதிய கடன்கள் பொருட்டு வழங்கிய காசோலைகள் வங்கிக் கெதிராக பணமாகக்கப்படுமானால் நிதிநிலமை கூற்று எவ்வாறு மாற்றமடையும்? (புள்ளி 3)

10). i. வளஒதுக்கீட்டில் வினைத்திறனின்மையை ஏற்படுத்தும் சந்தைப் பொருளாதார செயற்பாடுகள் எவை? (புள்ளி 4)

ii. சந்தையானது சமூக நலப்பண்டங்களை குறைவாகவே நிரம்பல் செய்கின்றன. வரைபடம் மூலம் விளக்குக. (புள்ளி 4)

iii. கீழ்வரும் பண்புகளுக்கு பொருத்தமான பண்டங்களை குறிப்பிடுக.
(அ) நுகர்வில் போட்டித்தன்மையற்றது நுகர்வை கட்டுப்படுத்த முடியாது.
(ஆ) நுகர்வில் போட்டித்தன்மையற்றது. நுகர்வை கட்டுப்படுத்தலாம்.
(இ) தனியார் நலனை விட சமூக நலன் அதிகமாக காணப்படும்.
(ஈ) நுகர்வில் போட்டியுடைய நுகர்வை கட்டுப்படுத்தும் பண்டம் (புள்ளி 4x1=4)

iv. வரி அறவிடுவதன் குறிக்கோள்கள் எவை? (புள்ளி 4)

v. இலங்கையின் வரி அரசிறையின் பிரதான மூலாதாரங்கள் எவை? (புள்ளி 4)

## முதலாம் தவணைப் பரீட்சை - 2018

### பொருளியல் Economics - தரம் 13

### பகுதி - I விடைகள்

| | | | | |
|---|---|---|---|---|
| 1) 3 | 11) 2 | 21) 2 | 31) 4 | 41) 3 |
| 2) 4 | 12) 5 | 22) 1 | 32) 2 | 42) 2 |
| 3) 2 | 13) 2 | 23) 4 | 33) 1 | 43) 4 |
| 4) 1 | 14) 4 | 24) 5 | 34) 3 | 44) 1 |
| 5) 4 | 15) 1 | 25) 2 | 35) 5 | 45) 3 |
| 6) 4 | 16) 3 | 26) 5 | 36) 5 | 46) 5 |
| 7) 5 | 17) 4 | 27) 4 | 37) 4 | 47) 4 |
| 8) 3 | 18) 1 | 28) 3 | 38) 3 | 48) 4 |
| 9) 1 | 19 4 | 29) 3 | 39) 2 | 49) 3 |
| 10) 3 | 20 5 | 30) 1 | 40) 1 | 50) 1 |

### பகுதி II

(01)
(i) மனிதன் உயிர்வாழ அவசியமான அனைத்தும் தேவைகளாகும். இவை வரையறுக்கப்பட்டவை. பொதுவானவை
தேவைகளை பூர்த்தி செய்யும் வழிவகைகள் விருப்பங்கள் எனப்படும், இவை வரையறுக்கப்படாதவை. வேறுபடும் தன்மை கொண்டவை


(ii) மூலதனம்:- உற்பத்திக்கு மனிதனால் உருவாக்கப்பட்ட மெய்ச்சொத்துக்கள் மூலதனம் எனப்படும். இவை தேய்மானமடையக் கூடியது.
(உ+ம்) இயந்திரம், கட்டடம், பொறிகள்.

மனிதமூலதனம்:- ஊழியர்களிடம் உற்பத்தி தொடர்பாக காணப்படுகின்ற விசேட நிபுணத்துவ அறிவு மனிதமூலதனமாகும். இது கல்வி, பயிற்சி, அனுபவத்தினால் தோன்றுகின்றது.

(iii) எல்லையற்ற மனித விருப்பங்களுடன் ஒப்பிடும் போது வளங்கள் வரையறுக்கப்பட்டிருத்தல் அருமையாகும். அத்துடன் அருமையான வளங்கள் பல்வேறு தேவைகளுக்கும் விருப்பங்களுக்கும் பயன்படுத்த முடியுமானதாக ~~[illegible]~~. மாற்றுப்பயன்பாடாகும். வளங்களுக்கு அருமையும் மாற்றுப்பயன்பாடும் காணப்படுவதினாலேயே பொருளாதாரத்தினுள் அடிப்படை பிரச்சினைகள் மற்றும் தெரிவை பொருளாதார பிரச்சினைகள் அனைத்தும் தோற்றம் பெறுகின்றது. இதனாலேயே பிரதான பொருளாதார பிரச்சினையாக 'அருமை' கருதப்படுகின்றது. அருமை இல்லாத சூழ்நிலையில் எந்த ஒரு பொருளாதார பிரச்சினையும் தோன்றாது.

(IV) உற்பத்தியில் வினைத்திறன் என்பது அதிகுறைந்த சராசரி செலவில் உற்பத்தியினை மேற்கொள்வதாகும். இதற்கு பூரண வேலை நிலையிலும் ஒரு உற்பத்தியும் பெறப்படல் வேண்டும்.

ஒதுக்கீட்டு வினைத்திறன் என்பது சமூகத்தின் விருப்பத் தெரிவினை உச்ச அளவில் திருப்திப்படுத்தும் வளங்கள் ஒதுக்கப்பட்டுள்ள நிலையாகும். இதற்கு எல்லைச் செலவு எல்லை நலனுக்கு சமப்படல் வேண்டும். (MC = MB)




(V) வளங்களின் உரிமை தனியாருக்கு காணப்படும் இலாப நோக்கில் விலைப் பொறிமுறையினூடாக அடிப்படை பொருளாதாரப் பிரச்சினைக்கு தீர்வு காணும் பொருளாதாரங்கள் சந்தைப் பொருளாதாரங்கள் எனப்படும்.

<u>அடிப்படை பண்புகள்</u>

1. தனியார் வள உரிமை
2. தனியார் முயற்சியாண்மை
3. விலைப் பொறிமுறை காணப்படல்.
4. சுயமான ஆர்வமே ஊக்கம் காணப்படல்.
5. உற்பத்தி, நுகர்வு சுதந்திரம் காணப்படல்.
6. அரச தலையீடு மட்டுப்படுத்தப்படுகிறது.

(2) I: விலையும் கேள்வித்தொகையும் மட்டுமே கவனத்திற் கொள்ளல்.
(II) விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாதிருத்தல்.
(III) இது ஒரு சாதாரண பண்டம்
(IV) நுகர்வோன் பகுத்தறிவாளன்.

(ii) கேள்வித்தொகை மாற்றம்:-
விலை தவிர்ந்த ஏனைய காரணிகள் மாறாத நிலையில் குறித்த பொருளின் விலையில் ஏற்படும் மாற்றத்தினால் கொள்வனவு செய்யும் அளவில் ஏற்படும் மாற்றம் கேள்வித் தொகை மாற்றம் ஆகும்.

<u>கேள்வி மாற்றம்</u>
குறித்த பொருளின் விலை நிலையாக இருக்க கேள்வியை தீர்மானிக்கும் ஏனைய காரணிகளில் ஏதாவது ஒன்றில் ஏற்படும் மாற்றத்தினால் கொள்வனவு செய்யும் அளவில் ஏற்படும் மாற்றம் கேள்வி மாற்றமாகும்.

(III) (i) பண்டங்களின் தன்மையை அறியலாம்
(ii) பதிலீட்டின் அளவினை அறியலாம்
(iii) நுகர்வோர் செலவை தீர்மானிக்க உதவும்
(iv) சந்தையின் தன்மையை அறியலாம்
(v) அரச வரி கொள்கை திட்டமிட உதவும்

(iv) (i) அதிகரித்துச் செல்லும் எல்லைச் செலவு
(ii) உற்பத்தியாளரின் இலாப நோக்கம்

(v) (அ) நிரம்பல் கோடு வலது புறம் நகர வேண்டும். விலை குறைய வேண்டும்.
(ஆ) கேள்விக் கோடு வலது புறம் நகர வேண்டும். விலை அதிகரிக்க வேண்டும்
(இ) கேள்விக் கோடு இடது புறம் நகர வேண்டும். விலை குறைய வேண்டும்
(ஈ) கேள்விக் கோடு வலது புறம் நகர வேண்டும். விலை அதிகரிக்க வேண்டும்
(பொருத்தமான, சரியான படங்களுக்கு புள்ளி வழங்குக)


(3)
I உற்பத்தியாளர் மிகை:-
உற்பத்தியாளரின் மொத்த வருமானத்திலிருந்து மாறும் செலவினை நீக்க வரும் பெறுமதியாகும்.
சந்தையிலுள்ள குறைந்த பட்ச நிரம்பல் விலைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.
நுகர்வோர் மிகை:-
நுகர்வோரின் உயர்ந்தபட்ச கேள்வி விலைக்கும் சந்தையில் கொள்வனவு செய்யும் விலைக்கும் இடையிலான வேறுபாடு ஆகும்.

II (அ) மிகைநிரம்பலை அரசு கொள்வனவு செய்யும் விலை ஆதரவு திட்டம்
(ஆ) ஒரு பகுதி கொள்வனவு செய்யும் விலை ஆதரவுத் திட்டம்.

III உச்சபட்ச விநியோகம், இரட்டை விலைகள், கறுப்புச்சந்தை விலை
அதிகாரப்பூர்வ விநியோகம், வேறு பொருட்களை இணைத்து விற்றல்.

IV (அ)
$$QD = QS$$
$$300 - 5P = -50 + 5P$$
$$P = 35, \quad Q = 125$$

(ஆ)




ச. விலை ரூ 33
ச. தொகை 165 அலகுகள்

(இ) ரூ 360

(ஈ) ரூ 4995.

(4)

(i) சில உள்ளீடுகள் நிலையானதாகவும் சில உள்ளீடுகள் மட்டும் மாற்றமடையும் காலமே குறுங்காலமாகும். குறுங்காலத்தில் மூலதனம் நிலையாக இருக்க உழைப்பு மாறும் காரணியாக காணப்படும். இதனால் குறுங்கால உற்பத்தி தொழிற்பாடு பின்வருமாறு அமையும்.

$$Q = F(\bar{K}, L, L_1, L_2, L_3, L_4, L_n)$$


(ii) கணக்கியல் செலவு என்பது வெளியாரிடமிருந்து கொள்வனவு செய்யும் வளங்களுக்கு ஏற்படும் நேர் செலவுகளை மட்டும் உள்ளடக்கும்.
பொருளியல் செலவு என்பது நேர் செலவுகளையும் உரிமையாளருக்கு சொந்தமான வளங்களுக்கு ஏற்படும் உய்த்தறியான செலவு-களையும் உள்ளடக்கும்.

பொருளியல் செலவு = நேர் செலவு + உய்த்தறியான செலவு

(iii) [illegible] சிக்கனமின்மை
உள்ளீடு பயன்பாட்டு சிக்கனமின்மை
தொழில்நுட்ப சிக்கனமின்மை
முகாமைத்துவ சிக்கனமின்மை
நிதி பயன்பாட்டு சிக்கனமின்மை
சந்தைப்படுத்தல் சிக்கனமின்மை.

(iv) பொருள் வேறுபடுத்தல், விலை வேறுபடுத்தல், விளம்பரச் செலவு-களுக்கு, அதிகளவான ஊழியர்கள் காணப்படுதல், போன்றவற்றை குறிப்பிடலாம்.

(v)



(5)

I உள்ளடக்கப்படாத பயனுள்ள விடயங்கள்.

(i) தொழிலாளர் இல்லத்தினுள் மேற்கொள்ளும் சேவைகள்
(ii) இயற்கையாக கிடைக்கின்ற வளங்கள்
(iii) கல்வியும் ஓய்வும்
(iv) வளங்களின் பெறுமதி அதிகரிப்பு

~~(v)~~ உள்ளடக்கப்படாத பயனற்ற நடவடிக்கைகள்.

(i) மாற்றல் நடவடிக்கைகள்
(ii) நிதிச் சொத்துக்களின் கொள்வனவு, விற்பனை
(iii) பயன்படுத்திய பொருட்கள் கொள்வனவு, விற்பனை

II அடிப்படை விலை :- உற்பத்தியாளன் தனது பொருட்கள் சேவைகள் மீது வருவதை பொருட்டு எதிர்பார்க்கும் விலையாகும்.

உற்பத்தியாளர் விலை :- விற்பனையாளர் பொருட்களை விற்பனை செய்யும் போது அறவிடும் விலையாகும். இது அடிப்படை விலையுடன் தேறிய வரிகளை சேர்த்து மானியங்களை நீக்க வருவதாகும்.

கொள்வனவாளர் விலை :- உற்பத்தி பொருட்களை கொள்வனவு செய்யும் போது விற்பனை விலையுடன் கொள்வனவாளருக்கு ஏற்படும் போக்குவரத்து செலவு, இடைத்தரகர் கட்டணம், கொள்வனவாளர் வரி உள்ளடக்கப்பட்டு கொள்வனவு மானியம் நீக்கப்பட்ட பெறுமதியாகும்.


III பிரதேசத்திற்கு உடைமையான பதிவு செய்யப்பட்ட கடற்பிரதேசம் அல்லது கப்பல்கள் தவிர்ந்த வானூர்தி மற்றும் பயணிகள் வாகனங்கள் உள்ளடக்கும் கொள்ளும் வருமானங்கள் காரணி வருமானம் ஆகும்

IV
(அ) 400 + 800 + 200 = 1400
(ஆ) 600 + 1400 + 100 = 2100
(இ) 2100 + 150 = 2250
(ஈ) 2250 + (−40) = 2210

(06)

I தன்னிச்சையான நுகர்வு மாற்றம்
முதலீட்டு செலவு மாற்றம்
அரச செலவு மாற்றம்
ஏற்றுமதி மாற்றம்
இறக்குமதி மாற்றம்
வரி மாற்றம்
சேமிப்பு மாற்றம்.

II



ii
$$Y = C + I$$
$$Y = 300 + 0.6Y_d + 100$$
$$Y = 400 + 0.6Y_d$$
$$Y = 1000$$

III சமநிலை வருமானமட்டம் வரைபடத்தில் 1000 என காட்டப்படுத் -தல் வேண்டும். இதற்கு அதிகரிப்பின் பின் சமநிலை வருமான மட்டம் 1500 என பெறப்படும்.
(படத்தில் $Y = E$ மற்றும் $W = J$) என்ற அடிப்படையில் காட்டப்பட்டிருத்தல் வேண்டும்.

IV நிலையான வரியில் ஏற்படும் மாற்றம் இறுதியில் எவ்வாறான மாற்றத்தை ஏற்படுத்தும் என வெளிப்படுத்தும்

$$K_G = \frac{1}{1-b} = \frac{1}{1-0.75} = \frac{1}{0.25} = 4$$

$$K_T = \frac{-b}{1-b} = \frac{-0.75}{1-0.75} = \frac{-0.75}{0.25} = -3$$

(7).
(i) முதல் நட்டமின்றியும் அபாயமின்றியும் காலதாமதமின்றியும் இலகுவாக் -காக இன்னுமொரு சொத்தாக மாற்ற கூடியதான தன்மை திரவத்தன்மையாகும். சட்டப்பணத்திற்கு 100% திரவத் தன்மை உண்டு.


பொதுமக்கள் தம்மிடம் பணத்தை வைத்திருக்க விரும்புவர் அது திரவத்தேர்வு எனப்படும்.

(ii) இலகுவாக பணமாக மாற்றக் கொள்ள கூடியதான சொத் -துக்கள் கிட்டிய பணமாகும். இவை பரிமாற்று ஊடகமாக செயற் -பட முடியாது. பெறுமான திரட்டாக உள்ளவையாகும்.

M4 பண நிரம்பலில் உள்ளடங்கும் கிட்டிய பணங்கள் போன்றவை

(i) வணிக வங்கிகளில் பொதுமக்களின் சேமிப்பு
(ii) NRFC வைப்புகளில் 50%
(iii) FCBU பிரிவுகளின் உள்நாட்டவரின் வைப்பு
(iv) பதிவு செய்யப்பட்ட விசேட வங்கிகள், நிதிக்கம்பனிகளில் உள்ள பொதுமக்களின் வைப்பு

(iii) பொருளாதாரம் நிறை தொழில் மட்ட நிலை அடைந்த பின்னரும் பொருளாதாரத்தின் மொத்த கேள்வி அதிகரிப்பினால் விலைமட்டம் அதிகரித்து செல்வது கேள் -இழுப்பு பணவீக்கமாகும்.



(iv) நியதி ஒதுக்க விகிதத்தை அதிகரித்தல்.
கொள்கை வட்டி வீதத்தை அதிகரித்தல்.
திறந்த சந்தையில் பிணையங்களை விற்பனை செய்தல்.

(v) 15% ஒதுக்கு விகிதமானால் ரூ 100 மில்லியனால் வீழ்ச்சியடையும்.

(8)

(i) பரிமாற்று ஊடகம், பெறுமான அளவீட்டுக் கருவி, பெறுமானத் திரட்டு, பிற்போடப்பட்ட கொடுப்பனவு சாதனம்.

(ii) (அ) பொ. மக். சட்டப்பணம்
வர்த். வங் சட்டப்பணம்
மத்திய வங்கியிலுள்ள வர்த்த வங்கிகளின் வைப்பு

| |
|---|
| 450 |
| 125 |
| 300 |
| 875 |

$450 + 350 = 800$

(ஆ) $M_1 =$ ~~$800 + 4000 = 4800$~~

(இ) $M_2 = 800 + 4000 = 4800$

(ஈ) $M_2b = 4800 + 650 = 5450$

(iii) நாணயக்கணிய கோட்பாட்டின் படி ஒரு நாட்டின் பணநிரம்பலுக்கும் பொதுவிலைமட்டத்திற்கும் நேரானதும் விகிதசமமானதுமான தொடர்புண்டு.
இதற்கு இரண்டு பிரதான எடுகோள்கள் உள்ளன.
I பணச்சுற்றோட்ட வேகம் நிலையானது
II பண்டங்கள் சேவைகளின் அளவு நிலையானது.

IV பொருளாதார உறுதி / நிதியியல் உறுதி } பேணுவதற்கு அவசியம்.

V (அ) மெய் (ஆ) மெய் (இ) பொய் (ஈ) பொய்

(9)

(i) மெய் வருமானம்
வட்டி வீதம்
விலை மட்டம்
எதிர்பார்க்கை பணவீக்கம்

(ii) * ஒரு நாட்டின் பணநிரம்பலுக்கு அடிப்படையாக அமைகின்ற பணமே அடிப்படைப் பணமாகும்.
* குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் பொதுமக்களின் சுற்றோட்டத்திலுள்ள பணத்தின் அளவு பணநிரம்பலாகும்.
* பணநிரம்பலுக்கும் ~~பணப் பெருக்கத்திற்கும்~~ பண அடிப்படைக்கும் இடையிலான விகிதம் பணப் பெருக்கி என அழைப்பர்.

பணநிரம்பல் = பண அடிப்படை × பணப் பெருக்கி.

(iii) அவசரக் கடன்கள் ஒப்படைப்பு வேறுபடுத்தி காட்டுவதற்கில் வேண்டும்.
(மத்திய வங்கி ஆளுநர்களுக்கு அமைய)

(iv) பொருளாதாரத்தில் பணநிரம்பலை ஒழுங்குபடுத்த வட்டி வீதத்தை கொள்கை வீதமாக மத்திய வங்கி வணிக வங்கிகள் மேற்கொள்ளும் நிதிபடுத்த கொள்கை வாய்ப்புகளின் போது பயன்படுத்தும் வட்டி வீதமாகும்.
* நிலையான வைப்பு வீதம் SDFR
* நிலையான கடன் வீதம் SLFR

(v) அடுத்த 100 மில்லியன் கடனாக வழங்கினால்.


(ஆ) நிதி நிலைமை கூற்று

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 21 m | ஒதுக்கு | 3 m |
| | | கடன் | 11 m |
| | | முதலீடு | 7 m |
| | 21 m | | 21 m |

(இ) நிதி நிலைமை கூற்று

| | | | |
|---|---|---|---|
| வைப்பு | 2000 | ஒதுக்கு | 2 m |
| | | கடன் | 11 m |
| | | முதலீடு | 7 m |
| | 2000 | | 2000 |

(10)
(i) (i) பொதுப்பண்டங்கள் உற்பத்தி செய்யப்படாமை
(ii) சமூக நலன்பண்டம் குறை உற்பத்தி.
(iii) வெளிவாரி விளைவுகள்
(iv) பூரண தகவல்கள் இன்மை
(v) தனியுரிமை தோன்றுதல்
(v) வருமான சமத்துவமின்மை.

(ii) 


(iii) (அ) பொதுப்பண்டம்
(ஆ) அரைப் பொதுப்பண்டம்
(இ) சமூக நலன்பண்டம்
(ஈ) தனியார் பண்டம்

(iv) விலையுறுதி ஏற்படுத்தல்
நிறைஉத்தியோகமட்டத்தை அடைதல்.
பொருளாதார வளர்ச்சி, அபிவிருத்தி.
சென்மதி நிலுவை பாதகத்தை தீர்த்தல்.
வருமான சமனின்மை நீக்கல்.
உள்நாட்டு கைத்தொழில்களை பாதுகாத்தல்.

(v) உற்பத்தி வரி / கலால் வரி.
பெறுமதி சேர் வரி
வருமான வரி
இறக்குமதி வரி.
பொருளாதார சேவை கட்டணம்.


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න